JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 07.10.2022

**STC. No. 771/2018 Name:Prabhu S/o.Palanisamy PW1**

<u>அ.சா.1 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1)என்னுடைய அம்மா பெயர் குணசுந்தரி. நானும் எனது அம்மாவும், அப்பாவும் ஒரே இடத்தில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். எனது அப்பா இச்சிப்பட்டி நெசவாளர் கூட்டுறவு வங்கியில் நூல் மதிப்பீட்டாளராக பணிபுரிந்து தற்போது விருப்ப ஓய்வு பெற்று தற்போது விவசாயம் செய்தும் என்னுடைய கார்மண்ட்ஸ் தொழிலுக்கு உதவியாகவும் இருந்து வருகிறார். என்னுடைய அப்பா நூல் பொறுப்பாளராக பணியில் இருந்தார் என்றால் அப்ரைசர் என சொல்லுவார்கள். அது நூல் பொறுப்பாளரா என்பது எனக்கு தெரியவில்லை.

2)நான் 2013-2014 ம் வருடத்தில் இருந்து கார்மண்ட்ஸ் நடத்தி வருகிறேன். கார்மண்ட்ஸ் தொழிலை தவிர நான் வட்டிக்கு பணம் கடனாக கொடுக்கும் வேலையும் பார்த்து வருகிறேனா என்றால் இல்லை. என்னுடைய கார்மண்ட்ஸ் கம்பெனியில் 2014 லிலிருந்து என்னிடம் எத்தனை பேர் வேலை பார்த்தார்கள் என்றால் 2014 ம் வருடத்தில் 7-8 பேர் இருந்தார்கள். 2015 ம் வருடத்தில் சுமார் 25 நபர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்றால் சரிதான். நான் நடத்தி வரும் கார்மண்ட்ஸ் உரிமையாளர் நிறுவனமா என்றால் ஆமாம். உரிமையாளர் நிறுவனத்திற்கு நான் உரிமையாளர் அல்ல என்றால் ஆவணங்களின் அடைப்படையில் நான் உரிமையாளர் அல்ல.

3)எனது அப்பா விருப்ப ஓய்வு பெற்று எந்த வருடத்தில் இருந்து கார்மண்ட்ஸ் நிறுவனம் ஆரம்பித்தார் என்றால் ஆரம்ப நிலையில் பதிவு பெறாமல் அதிக தொகை முதலீடு செய்யாமல் நடத்தி வந்தேன். அதன் பின்னிட்டு 2017-2018 ம் வருடத்தில் அதிக முதலீடு செய்து என்னுடைய அப்பா பெயரில் நிறுவனத்தை பதிவு செய்து கார்மண்ட்ஸ் தொழில் செய்து வருகிறேன். கார்மண்ட்ஸ் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் பெயர் என்னவென்றால் வேலவன் கார்மண்ட்ஸ்

ஆகும். வேலவன் கார்மண்ட்ஸ் கம்பெனிக்கு குறைந்த முதலீடு செய்து தான் ஆரம்பித்தேன் என்றால் சரிதான்.

4)என்னுடைய அப்பா உரிமையாளர் என பதிவு செய்த பின்னிட்டு கார்மண்ட்ஸ் நிறுவனத்தின் பெயர் என்னவென்றால் எஸ்.எல்.பி. கார்மண்ட்ஸ் என்ற பெயரில் உள்ளது. கார்மண்ட்ஸ் ஆரம்பித்தபோது எவ்வளவு முதலீடு செய்தேன் என்றால் ரூபார் இரண்டு லட்சம் முதலீடு செய்தேன். நான்கு, ஐந்து வருடங்கள் கார்மண்ட்ஸ் கம்பெனி பதிவு செய்யப்படாமல் நடந்து வந்தது. பதிவு செய்யாமல் நடத்தி வரப்பட்ட கார்மண்ட்ஸ் கம்பெனிக்கு உண்டான வரவு செலவு விபரங்கள் உள்ளதா என்றால் உள்ளது. பதிவு செய்யாமல் நடத்தி வந்த நிறுவனத்திற்கு வங்கி கணக்கு எதுவும் இருந்ததா என்றால் இல்லை. பெரிய தொகை பரிமாற்றம் எதுவும் இல்லாததால் வங்கி கணக்கு இல்லை என்றால் சரிதான்.

5)பதிவு செய்யாமல் நடத்தப்பட்ட கார்மண்ட்ஸ் கம்பெனிக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு கிடைத்தது என்றால் இரண்டு லட்சம், மூன்று லட்சம் வீதம் கிடைத்தது. எனது அப்பா பெயரில் பதிவு செய்யப்பட்ட பின்னர் எவ்வளவு முதலீடு செய்தோம் என்றால் ரூபாய் பத்து லட்சம் முதலீடு செய்தோம். 2018ம் வருடத்தில் எனது அப்பா பெயரில் நிறுவனம் பதிவு செய்தோம். 2018ம் வருடத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆரம்பித்த பின்னர் வங்கி கணக்கு துவங்கப்பட்டது என்றால் சரிதான்.

6)பதிவு செய்யப்படாத நிறுவனம் நடத்தி வந்த காலத்தில் எவ்வளவு வருமானம் வந்தது என்பதை காண்பிக்க ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த காலம் சம்பந்தப்பட்ட வருமான வரி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதனால் அந்த காலகட்டங்களில் வருமான வரி நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை.

7)நான் ஈட்டிய வருமானத்திற்கு வருமான கணக்கு காட்ட வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் பதிவு செய்யாமல் நடத்தி வந்த நிறுவனம் மூலம்பெற்ற வருமானத்தை எஸ்.எல்.பி. நிறுவனத்தில் முதலீடு செய்தேனா என்றால் பகுதி தொகையை முதலீடு செய்தேன். 2018ம் வருடத்தில்

இருந்து எஸ்.எல்.பி. கார்மண்ட்ஸ்க்கு முறையான கணக்கு வழக்கு பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். எஸ்.எல்.பி. கார்மண்ட்ஸ்க்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்து வருகிறது என்றால் சரிதான். எஸ்.எல்.பி. கார்மண்ட்ஸ் ஆரம்பிப்பதற்கு முன்னதாக எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எஸ்.எல்.பி. கார்மண்ட்ஸ் ஆரம்பிப்பதற்கு முன்னதாக எதிரியிடம் பணம் கொடுக்கல் வாங்கல் எதுவும் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. இரண்டு,மூன்று முறை நான் செய்துள்ளேன். என்னுடைய குடும்பத்தின் வருமானத்தில் எஸ்.எல்.பி. கார்மண்ட்ஸ்-ன் வருமானமும் உள்ளடங்கி உள்ளது என்றால் சரிதான். என்னுடைய அம்மா இல்லத்தரசியாக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. விவசாயம் செய்து வருகிறார்.

8)எனது குடும்பத்திற்கு வயக்காடு 8 ஏக்கரும், வரக்காடு 2 ஏக்கரும் உள்ளது. குணசுந்தரி என்பவர் ஈரோடு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் ஒரு விஸ்வநாதன் என்பவர் மீது புரோநோட் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதன் எண்.OS No.309/2018 என்றால் வழக்கு எண் எனக்கு தெரியாது. விஸ்வநாதனை யார் என்று எனக்கு தெரியும். அந்த விஸ்வநாதனும் எதிரியும் என்ன உறவு முறை என்றால் அண்ணன் தம்பி உறவு முறையாகும். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் கைத்தறி மற்றும் விசைதறி போட்டுள்ளார்.

9)எதிரி எந்த விலாசத்தில் தொழில் செய்து வருகிறார் என்றால் ஓலப்பாளையத்தில் உள்ள எதிரியின் வீட்டில் கை தறியும் பக்கத்து குடோனில் விசை தறியும் தொழில் செய்து வருகிறார். முழு விலாசம் என்னவென்றால் கதவு எண் எனக்கு தெரியாது. எதிரி எந்த பெயரில் தொழில் நடத்தி வந்தார் என்றால் பெயர் எனக்கு தெரியாது. எதிரியின் நிறுவனம் கூட்டு நிறுவனமா தனி நிறுவனமா என்றால் அது எனக்கு தெரியாது. நான் அந்த கைத்தறி குடோனுக்கு அடிக்கடி சென்று வந்துள்ளேன். எனது அப்பா நடத்தி வரும் கார்மண்ட்ஸ்க்கும் நான் பதிவு செய்யாமல் நடத்தி வந்த கார்மண்ட்ஸ்க்கும் எதிரி நடத்தி வரும் தொழிலுக்கும் ஏதாவது பரிவர்த்தனை சம்பந்தம் உள்ளதா என்றால் எதுவும் இல்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட பணபரிமாற்றத்திற்கு முன்பாக எப்போது எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்றால் 2014,2015 வருடத்தில் ஒரு முறை வாங்கினார். இரண்டாவது முறை 2018ம் வருடத்தில் வாங்கினார். முதல்முறை என்னிடம் எதிரி

இருபதாயிரமும், இரண்டாவது முறை இருபத்தைந்தாயிரமும் வாங்கினார். இந்த இரண்டு முறை பணம் வாங்கியபோது ஏதாவது ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை.

10)என்னுடைய அம்மாவிற்கும் விஸ்வநாதனுக்கும் இடையே சொல்லப்படும் பண பரிமாற்றம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய அம்மா விஸ்வநாதனிடம் பணம் கொடுத்தது பற்றி என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் பணம் கொடுத்தவுடன் என்னிடம் சொன்னார். பணபரிவர்த்தனை ஆவணங்களின் அடிப்படையில் நடந்துள்ளதா என்றால் பிராமிசரி நோட் எழுதி கொடுத்து பணம் வாங்கியதாக தெரிந்து கொண்டேன். இதற்கு முன்னதாக எதிரி என்னிடம் இரண்டு முறை பணம் பெற்ற சமயத்தில் அதற்கு ஆவணம் எதையும் கேட்டு வாங்க நான் முயற்சி செய்தேனா என்றால் இல்லை. எதிரியிடம் இரண்டு முறை நான் கொடுத்ததாக கூறும் பணத்தை நான் பதிவு செய்யாமல் நடத்தி வந்த நிறுவனத்தில் இருந்தோ அல்லது எனது அப்பா பெயரில் நடத்தி வரும் நிறுவனத்தில் இருந்தோ வந்த தொகையை கொண்டு கொடுத்தேனா என்றால் இல்லை. குடும்பத்தில் இருந்து ஒரு தொகை எடுக்கப்பட்டு பரிவர்த்தனை செய்யப்பட்டால் அதற்கு கணக்கு வழக்கு எதுவும் வைத்துள்ளோமா என்றால் இல்லை.

11)நான் எந்த ஆண்டில் இருந்து வருமான வரி தனிப்பட்ட முறையில் செலுத்தி வருகிறேன் என்றால் 2020-2021ம் ஆண்டிலிருந்து தாக்கல் செய்து வருகிறேன். நான் வருமான வரி தாக்கல் செய்தவற்கு எங்கெங்கு வருமானம் வருகிறது என்பதற்கான கணக்கு உள்ளது என்றால் சரிதான். 2018ம் ஆண்டில் எனக்கு தனியாக வங்கி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. 2010ம் வருடத்தில் இருந்து இரண்டு வருடங்கள் முன்னபின்ன என் பெயரில் வங்கி கணக்கு உள்ளது. எனது குடும்பத்தில் வருமானம் ஈட்டும் நபர்கள் நானும், எனது அம்மாவும், அப்பாவும் என்றால் சரிதான். கம்பெனியில் இருந்து வரும் வருமானத்தை நான் வைத்து கொள்வேன். எனக்கும் எனது தாயாருக்கும் விவசாயம் மூலம் வருமானம் வருகிறது என்பதை காண்பிக்க நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

12)நான் குடியிருக்கும் உப்பிலிபாளையத்தில் இருந்து எதிரியின் வீடு சுமார்

10 கி.மீ.தூரத்தில் உள்ளது. எதிரி எனக்கு உறவினரல்ல. எதிரியின் தம்பி விஸ்வநாதன் எனது அப்பாவுடன் இச்சிப்பட்டி கூட்டுறவு நெசவாளர் சொசைட்டியில் பணியாற்றினார் என்றால் சரிதான். எனது அப்பா இச்சிப்பட்டி கூட்டுறவு சொசையிட்டியில் பணிபுரிந்தபோது அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. எப்போது எதிரி இந்த வழக்கில் சொல்லப்பட்ட கடன் தொகையை கேட்டார் என்றால் 08.09.2018 ம் தேதி கேட்டார். போனில் கேட்டாரா அல்லது நேரில் கேட்டாரா என்றால் நேரில் கேட்டார். 08.10.2018 ம் தேதி சமயத்தில் என்னிடம் எத்தனை வங்கி கணக்கு இருந்தது என்றால் கனரா பேங்கில் இருந்தது. பரோடா பேங்கில் வங்கி கணக்கில் அப்போது எனக்கு அக்கவுண்ட் இருந்ததா இல்லையா என்பது தற்போது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

13)08.09.2018 ம் தேதியில் கனரா வங்கியில் எனது வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்பதை பார்க்க அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை வரவழைப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. 08.09.2018 ம் தேதிக்கு முன்னதாக நான் யாரிடமும் காசோலை பெற்று கொண்டு கடன் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 08.09.2018 ம் தேதியன்று எதிரி என்னிடம் கடன் கேட்டபோது காசோலை கொண்டு வந்தாரா என்றால் இல்லை. 08.09.2018 ம் தேதியன்று கடன் கேட்டபோது என்ன காரணத்திற்காக கடன் கேட்டார் என்று நான் புகாரிலும், சாட்சியத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு MICR காசோலைக்கும், Non-MICR காசோலைக்கும் உள்ள வேறுபாடு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய அப்பா பெயரில் துவக்கப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காசோலை MICR காசோலையா அல்லது non-MICR காசோலையா என்பது எனக்கு தெரியாது.

14)08.09.2018 ம் தேதியன்று எதிரிக்கு நான் கடன் கொடுக்காததற்கு ஏதாவது காரணம் உள்ளதா என்றால் சென்னிமலையில் வைத்து எதிரி என்னிடம் கடன் கேட்டார். அதனால் அடுத்த நாள் வரும்படி கூறினேன். சென்னிமலையில் எதிரி எங்கு வைத்து என்னிடம் கடன் கேட்டார் என்ற விபரத்தை நான்

நோட்டீசிலும், பிரமாண பத்திரிக்கையிலும், புகாரிலும் கூறவில்லை என்றால் சரிதான்.

(புகார்தாரரின் தந்தை பணியாற்றிய சொசைட்டியில் அவரது தந்தை மீது எடுக்கப்பட்ட துறை ரீதியான அறிக்கை சம்பந்தப்பட்ட ஆவணம் தேவைப்படுவதாக கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.